ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2198/57 - 2020 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2020.10.23

2198/57 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் திருத்தப்பட்டவாறான 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 2 ஆம் பந்தியின் (எம்) உப பந்திக்கு உடனடுத்துப் பின்வரும் உப பந்தியைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன் :-

(என்) மருந்தாக்கல் பொருட்களின் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளரது பரிந்துரையின் பேரில், சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு அமைவாக மருந்தாக்கல் பொருட்கள் உற்பத்தியாளர்களினால், மருந்து உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் மருந்து தயாரிப்பிற்கான இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட இயந்திரசாதனங்களும் உபகரணங்களும்.

இக்கட்டளையானது, 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி முதல் பயன்வலு உடையதாதல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2020, ஒற்றோபர் 23.

12-28

1A-PG 5220 — 575 (2020/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*